## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை சமூக மருத்துவ வைத்தியர்களின் கல்லூரிப் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

[*1999, யூலை மாதம் 24 ஆம் திகதி அத்தாட அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, யூன் மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியிட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 3.50**

# 1999 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை சமூக 5 மருத்துவ வைத்தியர்களின் கல்லூரிப் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டம்



[1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 61/96.

முன்னுரை.

இலங்கை சமூக மருத்துவ வைத்தியர்களின் கல்லூரி என அழைக்கபடுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்படி ருந்ததாதலா லும் அத்துடன் கல்லூரிப் பேரவை கூட்டிணைக்கப்படுவதற் கென விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்

இலங்கைச் சனநாக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

1. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இல்ங்கை சமூக மருத்துயர்களின், கல்லூாரிப் பேரனவ (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை சமூக வைத்தியர்களின் கல்லூரிப் பேரவையைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் தலைவர், தெரிவுசய்யப்பட்ட தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளர், பதிப்பாசிரியர், வேறு பத்து உறுப்பின்ர்கள், நேர்முன்னைய தலைவர், நேர்முன் னைய செயலாளர், நேர்முன்னைய பொருளாளர் ஆகியோர் அடங்கிய இலங்கை சமூக வைத்தியர்களின் கல்லூாரியின் அப்போதைய பேரவையின் உறுப்பினர்கள் பேரவையின் அவ்வப்பதவிகளுக்கு மீண்டும் தெரிவுசெய்யப்பட்டாலன்றி அல்லது வேறு ஏதேனும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டாலன்றி இலங்கை சமூக வைத்தியர்களின் கல்லூாரிப் ோரனவ என்ற மகுடத்தின்கீழ் இடையறாலழியுரிமைகொண்ட கூட்டி ணைக்கப்பட்ட குழவொன்றாதல் வேண்டும் என்பதுடன்) இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்பெயர்கொண்டு எல்லா நீதிற்கெதிராக வழாடரவும்படலாம் அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழத்தத்துவமும் அதிகாரமும் கொண்டி ருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. இச்கூட்டுத்தாபனத்தை நிறுவுதல் பற்றிய பொதுக் குறிக் போள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்துகின்றது

(அ) மருத்துவத் தொழிலாளர்களிடையே இவ்விடயத்திலான அறிவையும் அனுபவத்தையும் ஊக்கிவூப்பதற்காக பட்டப்பின்கல்வி, ஆராய்ச்சி என்பன உட்பட சமூக மருத்துவம் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசய்தல் ;

(ஆ) பொதுமக்களின் நலன்பேணலுக்கென சமூக மருத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும் பொது மக்களிடையே இவ்விடயம் பற்றிய விழிப் புணர்வை ஊக்குவித்தலும;

(இ) சமூக மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களுடனும் நிறுவனங்களுடனும் இணையுரிமையை ஊக்குவித்தலும் அத்துடன் அவ்வாட்களுக்கும் நிறுவனங்களுக்கும் துணைபுரிதலும்;

(ஈ) மேற்படி குறிக்கோள்கள் அளைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய் தல்;

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறெதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளகளை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங் களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவெற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனெடுக்கவும் அன்பளிப்புகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடு செய்யவும் கூட்டுத்தாபனத்தின் உடமையாக்கப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கும் ஏதேனும் காணியில் எவையேனும் கட்டிடங்களைக் கட்டவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோகளையும், சேவையானர்கயைும் வேலைக் கமர்த்தல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

5. (1) இந்தக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்யும்பொருட்டும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டும் உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் அத் துடன் சமுகமளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர் களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது எழுதப்பட்ட வேறெந்தச் சட்டத்துடன் ஒவ்வாதன வாகவிராத அத்தகைய விதிகளைக் காலத்திற்குக்காலம் அக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். ஆக்கப்பட்ட் அத்தகைய விதிகள் ஒத்த கூட்ட மொன்றிலும் ஒத்த முறையிலும் மாற்ப்படவும் சேர்க்கப் படவும் திருத்தப்படவும் அல்லது நீக்கப்படவும் முடியும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவலிருக்கும் இலங்கை சமூக மருத்துவ வைத்தியர்களின் கல்லூரியின் விதிகள், அவை, இச்சட்டத்துடன் அல்லது எழுத்திவான வேறேதேனும் சட்டத்துடன் ஒவ்வாதனவாக விராத அளவிற்கு இப்பிரிவின் கீழாக்கப்பட்ட விதிகளாக்க கருதப்பட வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினாகள் அனைவரும் கூட்டுத்தாபன் விதிகளுக்கு அமைந்தோர்களாதல் வேண்டும்.

பேரவைக்குச் செலுத்தற்படற் பாலனவும் பேரவையினால் செலுத்தப்படற் பாலனவையுமான சடன்கள்.

6. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இலங்கை சமூக மருத்துவ வைத்தியர்களின் கல்லூரிப் பேரவைக்குள்ள எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று கழகத்திற்கு வருமதியான எல்க் கடன்களும் அத்துடன் செலுத்தப்படற்பானலான ஒப்பப் பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காகச் செலுத்தப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

7.கூட்த்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு அன்பளிப்பு, நன்கொடை, மரணசாசனக் கையளிப்பு என்ற வகையாவோ வேறுவகையகவொ அதற்குரித்தாக்கப்படக் கூடிய ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திருக்கலாம் என்பதுமன் அத்தகைய ஆதனம் எதனையும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிக்க உள்ள முழத்ததுவத்துடன் கூட்டுத்தாபனம் சட்டரீதியாக இயலுமானதாதலும் ஆற்றருடையதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி

8. கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் கூட்டுத்தாப னத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பிர யோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் எந்தவொரு பாகமும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குப் பங்கிலாபம், கடன் மிகையூதியம் என்ற வகையில் அல்லது வேறேந்த வகையிலும், நேரடியாக அல்லது மறைமுகமாக, இலாபம் என்ற முறையில் செலுத்தப்படுதல் அல்லது கைமாற்றப் படுதல் ஆகாது.

எவ்வாறாயினும்–

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் செய்யப்பட்ட ஏதேனும் சேவைக்காக கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது கூட்டுத் தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு நல்லெண் ணத்தடன் நியாயமானலைவயும் போதியளவிலுமான ஊதியங்கள் செலுத்தப்படுதல்

°(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் எந்தக் கமபனியின் பங்குதாரராகவுள்ளாரோ அந்தக் கம்பனியால் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட வளவுக்கு நியாயமான வாடகையை செலுத்துதல் அத்துடன்

°(இ) னெது பணிகளை அல்லது கடமைளை நிறை வேற்றும்போது அல்லது ஆற்றும்போது அல்லது கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை மேமபடுத் தும்போது கூட்டுத்தாபனத்தின்எவரேனும் உறுப் பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் பேரவையின் முன்னங்கீகாரத்துடன் செய்யப்பட்ட நியாயமானவையாகவும் தோதானவையாகவும் உள்ள செலவினங்களை மீளநிரப்புதல் அல்லது மீளக் கொடுப்பனவு செய்தல்.

என்பவற்றுக்கு இப்பந்தியில் உள்ள ஏற்பாடுகளால் தடை ஏற்படாது.

9. கூட்டுத்தாபனத்தின இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யக்கூடிய அத்தகைய ஆட்களின் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான சாதனத்தில் இடப்படல் ஆகாது, அவர்கள் தாம் சமூகம் அளித்தமைக்கு அடையாளமாக இடுதல் சாட்சியொருவராக எவரேனுமாள் கையொப்பம் இடுவதற்குப் புறம்பானதாய் இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை,

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிடமிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் படச்த்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*